**Tamil Nadu Electricity Board Engineers' Sangam**
**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**
Regd. No. 124/MDS (Recognised)
(Affiliated to All India Federation of Power Diploma Engineers)
793, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.
44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014
Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| Er. A.ANTONYPADOVARAJ | Er. V. ASHOKKUMAR | Er. R.BADRINARAYANAN |


10.01.2014

அன்பு பொறியாளர்களே,

வணக்கம். 9.1.2014 அன்று வேலைப்பளு, ஊதிய உயர்வு ஒப்பந்தம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் சிறப்பாக ஏற்படுத்தப்பட்டது.

9.1.2014 அன்று காலை அளிக்கப்பட்ட ஒப்பந்த முன்வடிவில் விகிதாசாரம் 2:3, 2:2:1 என்ற 2005 வாசகங்களுடன், 2009 "Status Quo ante will continue" என்ற வாசகங்களும் இடம் பெற்று, அதனைத் தொடர்ந்து " Now it is decided to form a committee and resolve the issue in a time bound manner" என்று கொடுக்கப்பட்டுள்ளதால், இதில் தெளிவான இறுதி நிலையை எடுத்திட வாரியத் தலைவர் உள்ளிட்ட வாரிய உறுப்பினர்கள், செயலாளர், IRA ஆகியோருடன் தொடர்ந்து பேசி நமது நிலையை எடுத்துரைத்தோம். (வாரியத் தலைவர் அவர்கள் நேரடியாக இதனை விளக்குவதாக நம்மிடம் நம்தெரிவித்தார்கள்).

இதற்கிடையே அனைத்து தொழிற் சங்கங்களுடன் சங்கமும் தொடர்ந்து விகிதாசாரத்தை 2005 –ன் படி கொண்டுவர எடுக்கப் பட்ட நடவடிக்கையை தொடர்ந்து இணைப்பு குழு தொழிற்சங்கங்களின் சார்பில் இது குறித்து விவாதிக்கப்பட்டது. சகோதர தொழிற்சங்கங்கள் நம்முடன் இணைந்து பேச்சுவார்த்தையில் இதனை உறுதி செய்திட வலியுறுத்த முடிவெடுக்கப்பட்டு, அவ்வாறே சகோதர தொழிற்சங்கங்கள் நமது விகிதாசாரத்தை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்திட மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர். முதன்முறையாக அனைத்து சகோதர தொழிற் சங்கங்களும் ஒரே மேடையில் ஒரே நிலையில் விகிதாசாரத்திற்காக ஒன்றுபட்டு ஒத்துழைப்பு நல்கியது பொறியாளர் சங்கத்தின் மீதான மதிப்பிற்கும், நமது நடவடிக்கைக்கும் அமைந்திட்ட சான்றாகும்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் உரைக்கு பின்னர் நாம் விகிதாசாரத்தின் நிலையை ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிட கோரியபோது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும், மதிப்பிற்குறிய வாரியத் தலைவர் அவர்களும் IRA

அவர்களும் 2:3, 2:2:1 விகிதாசாரம் 2005ல் உள்ளது போன்றே 2009 லும் தற்போதும் தொடர்கிறது இதில் எந்த பாதிப்பும் வராது என்றும் சட்டரீதியாகவும் இதன் உள்கருத்து (Implied meaning) அமைந்துள்ளது என்றதோடு, விகிதாசாரம் இல்லையெனில் நீங்கள் உடனடியாக நீதிமன்றம் சென்று விகிதாசாரத்தை நிலை நிறுத்திவிட மாட்டீர்களா? ஆதலால் 2005ல் உள்ளது போன்றே 2009லும் 2014ல் தொடர்கிறது. மேலும் பிரதான தொழிற்சங்கங்கள் அனைவரும் வலியுறுத்தியுள்ளது போன்றே விகிதாசாரம் 2:3, 2:2:1 தொடர்வது உறுதி என்று தெரிவித்து ஒப்பந்தத்தில் கையொப்பம் இட கேட்டுக்கொண்டனர். மேலும் நாம் ஒப்பந்தத்தில் கையொப்பமிட வந்தபோது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் நம்பிக்கையோடு கையெழுத்து போடுங்கள், உங்கள் விகிதாசாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது, அதற்கு பாதிப்பு வராது என்று உறுதியளித்தார்கள்.

மதிப்பிற்குரிய வாரித்தலைவர் அவர்கள், Your Ratio is 200% ensured, உங்கள் முறையீட்டை பார்த்தபின் அதிகாரிகள் அனைவரையும் அழைத்து விவாதித்து விகிதாசாரம் 2005, 2009ல் உள்ளது போன்றே முழுமையாக உள்ளதை உறுதி செய்த பின்னர்தான் உங்களிடம் தெரிவித்துள்ளேன். உங்களுக்கு சந்தேகங்கள் இனி வேண்டாம் முழு மனதுடன் கையொப்பமிடுங்கள் நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று மேடையிலேயே மீண்டும் தெரிவித்தார்கள்.

முழுமையான விகிதாசாரம் அமலாக்கத்திற்கு உண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டு, சந்தேகங்களை ஒப்பந்த மேடையிலேயே மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும், மதிப்பிற்குரிய வாரியத்தலைவர் அவர்களும், வாரிய அதிகாரிகளும், I.R.A. அவர்களும் அனைத்து தொழிற்சங்கங்கள் முன்பாகவும், Commissioner of Labour மற்றும் Joint Commissioner of Labour முன்னிலையில் உறுதி செய்ததற்கும், சகோதர தொழிற்சங்கங்கள் நம்மோடு இணைந்து விகிதாசாரத்தில் ஓரணியில் ஒத்துழைத்ததற்கும், உணர்வுமிக்க ஒவ்வொரு பட்டயப் பொறியாளர்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

- தரஊதியம் அரசுத்துறையைப் போன்றே, TNEBல் AEக்கு மட்டும் (ரூ.5100/–) வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கையை அனைத்து சகோதர தொழிற்சங்கங்களும் ஓரணியில் நின்று அந்த ஊதிய நிலையில் இருக்கும் அனைவருக்கும் வழங்கிட வலியுறுத்தியுள்ளோம். வாரியம் இசைவு தெரிவித்துள்ளது.

  அனைத்து தொழிற்சங்கங்களின் கோரிக்கையை ஏற்று வாரியம் நடைமுறைப்படுத்திடும் என்று எதிர்பார்க்கிறோம்.

- தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான ஊதியத்தை அரசுத்துறைக்கு இணையாக வழங்கிட வலியுறுத்தியுள்ளோம். இதுபோன்ற நிலுவையிலுள்ள கோரிக்கைகள் ஒப்பந்த

ஷரத்துப்படி தனித்தனியாக சம்மந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடன் பேசி இறுதி செய்திட நடவடிக்கை எடுத்திடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- Re-option தொடர்பாக பேசியபோது, ஒப்பந்தத்தில் இல்லாமல், Executive order ஆக கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இதற்கான நடவடிக்கைகளையும் இணைப்புக்குழு சார்பாக தொடர்ந்து எடுத்திட உள்ளோம்.

முழுமையான உத்தரவாதத்துடன் கூடிய ஒப்பந்தத்தை இறுதி செய்யும் வரை நடந்த நிகழ்வுகளை சங்கம் (எப்போதும் போல தனது தகவலை உறுதி செய்த பின்னரே) உங்களிடம் தற்போதும் பகிர்ந்து கொண்டுள்ளது.

ஒன்றுபட்டு உணர்வுடன் நேரடி நடவடிக்கைகளில் இணைந்து சங்கத்திற்கு மேலும் வலிமை சேர்த்து, முழுமையாக விகிதாசாரத்திற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் வாரியத்தலைவர் அவர்களின் உத்தரவாததிற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி பாராட்டுகிறோம்.

விகிதாசாரம் தொடர்பான நமது நடவடிக்கைகள், முறையீடுகள், வாரிய உறுதிகள் விரைவில் வலைதளத்தில் வெளியிடப்படும்.

வாழ்க பொறியாளர் சங்கம்

அன்புடன்
**வி. அசோக்குமார்**
பொதுச் செயலாளர்.